322
The Registrar of Books,
Madras 6.

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை–ரு | தருதலம், மாம்பாக்கம் ; கர, ஆடி ; 10—8—51. | தளிர் சரு

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

'கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

திருக்கழுக்குன்றம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
NOV 1951
MADRAS

ஆண்டுக் கையொப்பம் ரு. 4. தனித் தாள்—அணா 1

இது, திருக்கழுக்குன்றத்தில் ஜூலை 6, 7, 8 நாட்களில் திருமுறை விழா முதலிய சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்ற போது திருமுறைப் பேரவைக்குத் தலைமை தாங்கிய சான்றோர் சைவத் திருவாளர் ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் கூறிய அறவுரைகளுள் முதன்மையானதாகும்.

பிள்ளையவர்களின் தலைமையுரையில் பல அரிய கருத்துக்கள் உதிர்ந்தன. அவற்றுள் அவர்களின் உண்மை அன்பு ஒழுக்கம் அருளுணர்வு தொண்டுணர்ச்சி முதலிய சான்றாண்மைப் பண்புகள் நிழலாடின. அவை வருமாறு:

"போர் முழக்கம், இயற்கை மாறுபாடு முதலிய காரணங்களால் இன்று மக்கள் வாழ்க்கை நலத்துக்கு இன்றியமையாத உணவு, உடை, முதலிய வசதிகள் மிகவும் குறைந்திருக்கின்றன. நிறைந்துள்ள இடங்களிலிருந்து அவற்றை இல்லா இடங்களுக்குக் கொண்டு சென்று நிரப்ப இயற்கைப் பொருட்களை உயர்வினால் ஏற்பட்ட புகைவண்டி, மின்வண்டி, உந்துவண்டி (பஸ்), கப்பல், வானூர்தி முதலிய எத்தனையோ வசதிகள் இருந்துங்கூட எல்லோரும் அவற்றை வேண்டிய அளவு பெற முடியவில்லை. காரணம் "கொள்வதூஉம் மிகை கொளாஅது கொடுப்பதூஉம் குறை கொடாஅது, தமவும் பிறவும் ஒப்ப நாடி" நடைபெற வேண்டிய வாணிப உலகு, பொய்யும் வஞ்சனையும் புரட்டும் நிரம்பியதாய் இருப்பதே ஆகும். அதனால் பொருள்கள் உள்ள இடங்களும் இல்லாத இடங்கள் போலவே இருக்கின்றன. செல்வமும் செல்வாக்கும் உடையார்க்கு எதுவும் விற்கும், எவ்வாறினும் கிடைத்து விடுகின்றன. மற்றவர்கள் கிடைத்தவைகளை உண்டும் உடுத்தும் பிணியும் பிணக்குமுற்று வருந்துகின்றனர். முதலாளி தொழிலாளிப் போராட்டம்; அரசியல் கட்சிப் போராட்டம்; அருள் நெறி அமைப்புகளுக்குள்ளும் போராட்டம் முகிழ்க்கின்றன.........

வழிபாடு செய்க!

(ஆடலரசு)

இனி, போர் முழக்கம், வாணிப வஞ்சனை, என் இயற்கை மாறுபாட்டுக்குக்கூடக் காரணம் மக்களின் மன நலம் நன்றாயில்லாததே என்பதை நுண்ணிய அறிவாளர்கள் எவரும் ஒப்புவர். "மனம் போல வாழ்வு' என்பது ஆன்றோர் வாக்கன்றோ?......

எனவே, வாழ்வு செம்மையுற, வளங்கள் நிறையப், போராட்டங்கள்

திருமுறை மகாநாட்டுத் தலைவர்
திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள்

ஒழிய, அமைதி நிலவக், கலைகள் வளர, மக்கள் மனம் செம்மைப்பட வேண்டும். மனம் செம்மைப்படச் சான்றோர் கூட்டுறவு வேண்டும். சான்றோர் கூட்டமும் மிக அருகி இருக்கிற இந்நாட்களில் அவர்கள் கூட்டுறவை எவ்வாறு பெறுவது?......

அதற்காகவே வழிபாடு செய்க! தொல்காப்பியர், திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், மெய்கண்டார், இராமலிங்க அடிகள், காந்தியடிகள் போன்ற சான்றோர்களை மீண்டும் மீண்டும் உலகுக்கு உதவும்படி திருவருளாற்றலில் நம்பிக்கையுடையார் அனைவரும் ஆண்டவனை வழிபடச் செய்க! நாடோறும் சிறிது நேரமேனும் தனித்து வழிபாடு செய்க! கிழமைக்கு ஒரு முறையேனும் கூட்டுமுறையில வழிபாடு செய்க! ஆண்டுக்கு ஒருமுறையேனும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடித் திருக்கழுக்குன்றம் போன்ற திருவூர்களிற் கூடி வழிபாடு செய்க! வழிபாட்டின்போது அவரவர்களும் தமது வாழ்க்கைத் தூய்மை பற்றித் தம்மைத் தாமே பரிசோதனை செய்து கொள்க! அப்போது வழிபாடும் வாழ்க்கையைத் தூய்மை செய்யும். ஆகவே,

"நோய்நாடி நோய்முதல் நாடி
அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல"

என்றபடி இக்கால இடர்ப்பாடுகள் அனைத்துக்கும் மூல காரணம் மன நலக்குறைவே என நுனித்துணர்ந்து, அந்நலத்தைப் பெறத் துணை செய்யக்கூடிய வழிபாட்டு நெறியைக் கைக்கொள்ளுமாறு மக்களைக் கேட்டுக் கொள்வதே கழுக்குன்ற விழாவின் விழுப்பமான செய்தியும் ஆகும் என்க!"

"தனக்குவமை இல்லாதான்
தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

—திருக்குறள்.

வழிபாடு சிறக்க! வாழ்க மன்பதை!!

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

NOV 1951 MADRAS

மலை மருந்து

"நிலவு"

திருக்கழுக்குன்றத்தில் இருக்கும் மலை மண் மிகவும் ஆற்றல் வாய்ந்தது. அதனால், அதை மலை மருந்து என்று தென்னாட்டார் கருதுகிறார்கள். இதற்கு மலை மருந்து என்று கருதக் காரணம், ஆண்டவனும் மலை மருந்து எனப் புகழ் பெற்று உடனிருந்து துணை புரிவதுதான்!

பல ஆராய்ச்சிகள் செய்து மருத்துவர்கள் மருந்து கண்டுபிடித்திருக்கிறார்கள். அதைப்போலவே முன்னோர்களில் உருக்கமுடையவர்கள் இந்த மலை மருந்தின் நலத்தை ஆராய்ந்து கண்டு இம் மண்ணை மருந்தாகக் கூறி இருக்கிறார்கள். இது உண்மையில் நோய் தீர்க்கும்' மருந்து எனக் கூறுவது மிக மிகப் பொருந்தும். இந்த மலை மருந்தை உண்பதினாலும் மேற்பூச்சாகத் தடவுவதினாலும் அன்பர்களின் நோய் குணமாகி யிருக்கிறது.

மருந்தாய் உதவும் திருக்கழுக்குன்ற மலையும் விரிந்த வான் வெளியும்

திருக்கழுக்குன்றத்தில் திருமுறைப் பெரு விழாவிற்காகச் சிவனடியார் திருக்கூட்டம் ஆனித் திங்களிற் கூடியிருந்தது. முதல் நாள் இரவு அம்மன் அலங்காரத்தை எல்லோரும் கண்டு களித்தனர். மறுநாள் பல அரிய சொற்பொழிவுகள் நடந்தன. திருமுருக கிருபாநந்த வாரியார் அவர்கள், திருக்கழுக்குன்றத்தின் சிறப்பை மிக அழகாகவும் எல்லாருக்கும் புரியும் வகையிலும் விளக்கமாகவும் விரிவாகவும் பேசினார். அவர் கூறிய ஒவ்வொரு கருத்தும் முற்றிலும் உண்மை. விரிவுரைகளை ஆயிரக்கணக்கான அன்பர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அந்த அன்பர்களில் ஒருவர் திருக்கழுக்குன்றத்தின் மலை மருந்தைப் பற்றி தனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறினார். அதனால் அதைப் பற்றி இருவருக்குள் வாதம் நடந்தது.

நம்பிக்கை இல்லாத அன்பர் கூறியது:—'இந்த மலை மருந்தைப் பற்றி நம்பிக்கை வைப்பது வெறும் நம்பிக்கை; காட்டாக, ஒரு குடும்பத்தார் ஒரு மருத்துவரிடம் மிக்க நம்பிக்கை வைத்துக்கொண்டிருப்பார். அவரிடம் மருந்து தின்றால் மட்டுந்தான் தங்கள் நோய் தீரும் என்பர். ஒரு முறை மருத்துவர் வெளியூருக்குச் சென்றிருந்தார். அப்போது அக் குடும்பத்தில் ஒருவருக்கு உடல் நலம் குறைவாய் இருந்தது. வழக்கப்படி மருந்து சாப்பிடும் மருத்துவர் இல்லாமையால், வேறு மருத்துவரிடம் மருந்து உண்டனர். நோய் குணமாகவில்லை. அதனால் அவர்கள் பழைய மருத்துவர் போயிருக்கும் இடத்தின் முகவரி அறிந்து பணம் அனுப்பி வரச் சொல்லி எழுதி இருந்தார்கள். அதைக் கண்டு அந்த மருத்துவரும் வந்தார். உடல் நலம் குறைவாய் இருப்பவரைச் சோதித்துப் பார்த்த போது, நோய் ஒன்றும் இல்லை என்று தெரிந்தது. ஆயினும் தன் மருத்துவத்தில் அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை புலப்பட்டது. ஆகவே, அவர் மருந்து ஒன்றும் கொடுக்காமல், யாருக்கும் தெரியாமல் புட்டியில் தண்ணீரை ஊற்றி வைத்துச் 'சீல்' வைத்து, இதை மூன்று நாட்கள் சாப்பிட்டால் சரியாகப் போய்விடும் என்று சொல்லிச் சென்றார். சாப்பிட்டபின் உடல் நலமாகிவிட்டதாக நோயாளர் உணர்ந்தார்.

இதற்குக் காரணம் நம்பிக்கை தான். தண்ணீரைக் குடித்தால் உடல் நலமாகுமா?'

அதற்கு மற்றவர் கூறியது:—'பொதுவாக மண்ணிற்கு நோய் நீக்கும் ஆற்றல் இருக்கிறது. செம்மண் களிமண் போன்றவை சிறந்த மருந்துத் தன்மை அமைந்தவை. 'அக்கி' என்று ஒரு நோய் வரும். அதற்குச்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை 3	கர, ஆடி, 10-8-51 வெள்ளி	தளிர் 43

வெள்ளம் - - - - பெருகிற்று!

என்ன இது! மழை யில்லாத இந்தக் காலத்தில் வெள்ளமாவது, பெருகவாவது!

ஆம், சென்னையிலிருந்து தெய்வ உணர்ச்சி வெள்ளம், மெய் உணர்ச்சி வெள்ளம் திருக்கழுக்குன்றத்தை நோக்கிச் சென்ற மாதத்தில் பெருகிற்று.

தொண்ட நன்னாட்டின் மெய்யன்பு வெள்ளமே திருக்கழுக்குன்றத்தில் கரை புரண்டு ஓடியது எனலாம்.

அந்தப் பெரிய மலைப் பதியில், உருக்க உணர்வு வெள்ளம், விரிவுரை இன்ப வெள்ளம், திருமுறை இசை வெள்ளம், விழாக்களின் திருக்கோல வெள்ளம், அறுசுவை உணவு வெள்ளம், அன்பர் திருக்கூட்ட வெள்ளம் என எல்லாம் சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட வெள்ளமாய்த் திரண்டு பெருகி, ஜூலை 6, 7, 8-ம் தேதிகளில் பெருநலம் உண்டு பண்ணின.

கடைசி நாளில் கடைசி நேரத்தில் மேகங்கள் எங்கிருந்தோ வந்து கழுக்குன்ற மலையை முற்றுகையிட்டு, உண்மையாகவே பெருமழை பொழிந்து மலைவலப்பாதை முழுதும் வெள்ளம் பெருகிற்று.

காணரும் வேட்பக் கண்கொள்ளாக் காட்சியாய் இங்ஙனம் கழுக்குன்றத் திருமுறைப் பெருவிழா மாணிக்கவாசகர் திருநாளில் நிகழ்ந்து நிறைவேறியது, திருவருட் செயலே!

விழாவில் எதிரொலி

"இவ்வளவு பெரிய திருக்கூட்டத்துக்கு வரவேற்பளிக்கும் பேறு கிடைத்தது; மனம் நிறைவாய் விட்டது.

வரவேற்புத்தலைவர் மாக்காணம்
எக்கிய கணபதி முதலியார்

இன்று திருப்படி விழாவில் திருப்புகழ் மணியவர்கள் அப்பரைப் பற்றி அழகாகப் பேசினார்கள்.

சிவநேயச் செல்வர் மாக்காணம்
எக்கிய சிங்காரவேல் முதலியார்

தள்ளாத வயதில் திருப்புகழ் மணியவர்கள் பக்திப் பொழிவுகளைச் செய்துகொண்டு இவ்வளவு உயரம் மலை ஏறி வெயிலில் இறங்கி விழாவைச் சிறப்பித்தது மிகவும் பாராட்டுதற் குரியது. M. R. சம்பந்தம்

திருக்கழுக்குன்றத்தின் அடிவாரத்தில் அடியார் திருக்கூட்டம் திரண்டிருந்த காட்சி, திருக் கயிலைக் காட்சியாய் இருந்தது.

திருக்கழுக்குன்றத்துக்குச் சென்னையைக் காந்தம்போல் இழுக்கும் சக்தி இருக்கிறது. அது காஞ்சிக்குக் கூட இல்லை.

கழுக்குன்ற வழிபாட்டு நிகழ்ச்சிகளால் உண்டான உருக்கம் கண்ணீரும் கம்பலையும் விளைத்துவிட்டது.

சித்திரைப் பெருவிழாவைப் போல், மாணிக்கவாசகர் திருநாள் விழா பெருவிழாவாய் விட்டது. இன்னும் பெருகிவரும்.

அடுத்த ஆனி மகம் உடனே வரவில்லையே என்று இருக்கிறது.

—மா. அப்பாதுரை,
பூந்தோட்டம், திம்மாவரம்.

அடியார் திரள் தேவாரக் கோட்டிகளுடன் மலை வலத்தில் தொடர்ந்து ஊர்ந்து செல்லுதல், ஒரு கல் நீளம் இருக்கிறது; இன்னும் இரண்டாண்டுகளில் மலை வலப் பாதை முழுதும் வட்டமாய் நிரம்பி ஊரும்.

—சைதைத் தங்கவேல் முதலியார்

திருக்கழுக்குன்றத்தில் மாணிக்கவாசகர் திருநாளில் மகா பெருங்கூட்டம்.

சென்னை, சிவப்பிரகாச முதலியார்

திருமுறைப் பெருவிழாவுக்கு அவ்வளவு திருக்கூட்டம் வந்தது வியக்கத் தக்கது.

பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்

திருக்கூட்டம் இன்னும் லக்ஷக் கணக்கில் பெருகி அரசினர் மதிக்கப் பணியாற்றுமாக!

—ச. சச்சிதானந்தம் பிள்ளை

கிருபாநந்தவாரியார் விரிவுரையில் வரும் உதாரணங்கள் நன்றாயிருக்கின்றன.

விழா சிறப்பாயிருந்தது; மழையும் பொழிந்தது. ஆயிரக் கணக்கில் அன்பர்கள் நனைந்தாலும், பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு இப் பக்கத்தில் மழையால் பெரு நன்மை உண்டாயிருக்கிறது.

அப்பர் சுந்தர முதலியார்
(Retd.) D. E. O.

சிவனடியார் திருக்கூட்டம் மகிமை தான். மழை கண்டோம்.

வல்லிபுரம்
V. M. கந்தசாமி முதலியார்

விழா, மிகச் சிறப்பாய் நிகழ்ந்தது.

சிவாநந்த முனிவர்,
குகை, கழுக்குன்றம்.

முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ?

மயிலை தெய்வசிகாமணி

கைத்தறி ஆடைகள்
வணிகக் குறி!
—N. K. M.—
தங்க நாடா
(பதிவு)
எண் 20 முதல் 100 வரையில் வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.
நூலாடைகட்கும் பட்டாடைகட்கும்
நம்பிக்கையான இடம் :
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
துணி வாணிபம்,
53, சிடங்குத் தெரு, சென்னை 1.

கழுக்குன்றில் உதிர்ந்த மலர்கள்

"பிறை"

திருப்புகழ் மணி

"ஈசன் எங்கிருக்கிறார் என்றால் ஞானத்தில்தான் இருக்கிறார்" என்று வேதம் கூறுகிறது.

காவலாக வைத்த வேலையாட்கள் வீட்டில் நுழைந்துகொண்டு 'வீடு தம்முடையது' என்று கூறுவது போல, புலன்கள் ஐந்தும் நம்மை ஏமாற்றுகின்றன.

மலை ஏறும்போது படிகளில் கற்பூரம் ஏற்ற வேண்டுமானால் கையில் தீவட்டியுடன் செல்கிறார்கள்; அது போல், ஞானம் பெற விரும்புவோர் தியானம் செய்ய வேண்டும்.

ச. சச்சிதானந்தம் பிள்ளை

வாய்வீரர் என்னும் ஏசுதல் ஒழிய நம்மவர் கரும வீரராய் விளங்க வேண்டும். மாளிகையைத் தீப்பிடிக்கும்போது, மாளிகையின் சித்திரங்களைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்க முடியுமா? பண்டைப் பெருமைகளைப் பேசி மகிழ்ந்து கொண்டிருப்பதற்கு இது காலமன்று.

கட்டுத் திட்டங்களுக்குப் பணிதலாகிய பண்பு, செயல் நிகழ்வதற்கு இன்றியமையாதது.

சைவ நூல்கள், 'திருமுறைகள்' எனச் சிறப்பிக்கப் பெற்றன. 'ஞானத்தைத் தந்து வாழ்க்கையை முறைப்படுத்துவன' என்பது பொருள். (திரு-ஞானம்)

வேதம் என்பது சிறந்த அறிவு; அது மலைக்கு ஒப்பானது; அறிவின் உச்சியில் உள்ள ஆண்டவனை மலையின் உச்சியில் உள்ளவராகக் காண்கின்றோம்.

சமயம் வெறும் ஆள் பலத்தால் முன்னேற முடியாது; பண்பால் உயர வேண்டும். ஒற்றுமையால், சமயத்துக்கு ஆணி போன்ற ஒரு மத்திய சபையும் வேண்டும்.

பெண்களின் உள்ளம் ஈரமும் மென்மையும் வாய்ந்தது. அவர்கள் ஈன்றெடுக்கும் பெண்களும் பிள்ளைகளுமே உலக மக்கள். தாம் பெற்றெடுக்கும் குழந்தைகள் உண்மையும் தியாகமும் ஆற்றலும் உடையவர்களாய் விளங்கிப் பிறர்க்குக் கெடுதி செய்யாத நல்வாழ்வில் ஓங்கவேண்டும் என்று அவர்கள் எண்ணி வரவேண்டும்.

கி. வா. ஜகந்நாதையர்

அம்மை அப்பர் இருவரையும் ஒரே நேரத்தில் வணங்குவதற்கு ஒரு வழி இருக்கிறது. அவர் இருவரையும் தம்முள் இருத்திப் போற்றும் அடியார்களை வணங்குவதுதான் அது. ஒரே வணக்கத்தில் அம்மை அப்பரையும் அவர் அடியாரையும் வணங்குவதாய் முடிகிறது.

பாலைவனத்திலும் மின்சாரம் ஒளி வீசிக்கொண்டிருப்பதுபோல், ஆண்டவன் எங்கும் விளங்கிக்கொண்டிருக்கிறான்.

தேனூர் வரகவி சொக்கலிங்கனார் இயற்றியுள்ள 'சேய்த்தொண்டர் புராணம்' என்னும் முருகவேளின் பன்னிரண்டாந் திருமுறை மிகவும் அருமையாக அமைந்திருக்கிறது. அதில், அருணகிரிநாதர் புராணத்தில், "கொங்கெங்கே எங்கே யென்றளியினங்கள் மலரினத்தைக் குடையுமாறு" என்னும் அழகான பாடலில், ஆண்டவன் அருள் நம்மைத் தேடிவரும் திறம் பேசப்பட்டிருக்கிறது. திருக்கழுக்குன்றத்தை நாம் தேடி வருமாறு செய்ததும் அவன் அருளே.

புலவர் முருகவேள்

தொல்காப்பியர் திருவள்ளுவர் சிறந்த பேராசிரியர்கள். அவர் நூல்கள் புரியவில்லை என்றால், மாணிக்கவாசகர் நூல்களைப் படித்துப் பண்பு பெறலாம்.

அன்பை விளக்குவது திருவாசகம். திருவாசகத்தைச் சமயாசிரியர் மூவரும் போற்றி ஆண்டிருக்கின்றனர்.

திருவாசகத்தில் வந்திருக்கும் பண்பாடுகள் சங்க காலப் பண்பாடுகள்! சங்க நூல்களை நன்றாகப் படித்துப் போற்றியவர் மாணிக்கவாசகர், அவர் கோவை நூலினாலும் இது விளங்கும்.

கோவிந்தராச பிள்ளை

தனிப் பதிகங்களாகப் பாடல் பெறாத சில தலங்கள் 'வைப்புத் தலம்' எனப் போற்றப்படும். ஆனால், தனிப் பதிகங்களாக நால்வர் பாடலும் பெற்ற பெருந் தலமாகிய திருக்கழுக்குன்றமும் ஒரு வகையில் வைப்புத் தலமே. அது திருவடி வைப்புத் தலமாய்த் திகழ்கின்றது!

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர் பெற்ற உபதேசம் 'பேதமில்லதொர் கற்பு'! இதை அவர், "பேதமில்லதொர் கற்பு அளித்த பெருந்துறைப் பெரு வெள்ளமே!" என்று திருக்கழுக்குன்றத்தில் தாமே வெளிப்படுத்தினார். திருப்பெருந்துறையில் கிடைத்தது உபதேசம்! திருக்கழுக்குன்றத்தில் அதன் நிறைவு கிடைத்ததுபோலும்.

'பிறப்புக்கு அஞ்சேன் ஆனால் இறப்பதற்கு என் செய்வேன்' என்று கலங்கிய மாணிக்கவாசகர், தாம் அப்பொல்லாமையற்ற பெரு நிலை பெற்றதையும் திருக்கழுக்குன்றப் பதிகத்தில் வெளிப்படுத்தினார்.

க. சோமசுந்தர செட்டியார்

முதன் முதலாகத் திருமுறை நடத்தினவர் கதிர்வேல் பிள்ளை; இப்போது இளவழகனார்.

புராணங்கள் அளவில்லாதன இருந்தாலும், சிறந்தது பன்னிரண்டாந் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணம்!

முதல் பதினொரு திருமுறைகள் பதினொரு மந்திரம் போன்றவை.

தமிழார்வம், தமிழிலுள்ள நூல்களை நன்றாய்ப் படிப்பதில் இருக்க வேண்டும்; அப்போதுதான் பயன்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

செம்மண்ணைக் குழைத்துப் பூசி, சிவனை நினைத்து ஓம் என்று அக்கி மேல் எழுதுவார்கள். அது குணமாவதுண்டு. மண் பாண்டங்களில் சமைத்து உண்பது உடலுக்கு நல்லது என்றும் சொல்வார்கள். களிமண் தலைக்குத் தேய்த்துக் கொள்வதும் புண்களுக்குப் பூசுவதும் வழக்கம். இவைகள் வாழ்க்கையில் காணும் பழக்கம்.

அதுவுமன்றி, ஆண்டவர் சந்நிதியில் இருக்கும் மண்ணிற்கு இன்னும் ஆற்றல் மிகுதி. தக்கோர் அருள் பெற்று உலாவிய இடம் திருக்கழுக்குன்றம். இந்த மலையின் மண் நல்ல செம்மண். மேலும், மலையில் இருப்பதால் இம் மண்ணுடன் சஞ்சீவியும் மூலிகைகளும் கலந்திருக்கின்றன. அதனால் இதற்குச் சிறப்புண்டு. இம் மண்ணிற்கு நோய் நீக்கும் ஆற்றலும், தெளிவு உருக்கம் கவர்ச்சி முதலிய நலன்களைத் தரும் வன்மையும் உண்டு.

இயற்கையில் அறிவு குறைந்த மனிதர்கள் அறிவாளிகளாகிய பெரியவர்களுடன் பழகுவதால் பெரிய அறிவுடையவர்களாக மாறுகிறார்கள். "நல்லார் சொல் கேட்பதுவும் நன்று" என்னும் பாட்டின் கருத்தை ஆராய்ந்து பார்த்தால் இதன் நம்பிக்கை புலனாகும். அதுபோல் மண்ணிற்கு மிக்க ஆற்றல் இல்லை என்றாலும் ஆண்டவர் இருக்கும் இடத்தில் அம் மண் இருப்பதால் அதற்கு அதிக சக்தி உண்டு. பொதுவாக ஒருவர் பழக்க வழக்கங்கள் இடத்தையும், சூழ்நிலையையும் பொறுத்தவை.'

பொழுது கடந்துவிட்டமையால், பேச்சு முடிந்தது. மேற்கொண்டு நடக்கும் காரியங்களைக் கவனிக்கச் சென்றுவிட்டனர். ஐயம் கொண்ட அன்பர்க்கும் சூழ இருந்தவர்க்கும் அன்று ஓரளவு அமைதியுண்டானது தெரிந்தது.

வேதகிரி நாதர்—எங்கள்
விதிக்கு மலை மருந்து!
வேதமலை மண்ணும்—எங்கள்
வினைக்கு மலை மருந்து!

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

கொள்ள முடியும். திருமுறைப் படிப்பு பல நலங்களை நல்கும்.

வ. சு. செங்கல்வராய பிள்ளை

கழுக்குன்றம் அன்பர்களுக்கு இருப்பிடம். மாணிக்கவாசகர் போன்ற அடியார் பலர்க்குக் காட்சி கொடுத்த இடம்.

அடியார், திருக்கழுக்குன்றத்தில் மலைவலம் வருதல் வழக்கம்; ஆண்டவர் அடியார் பொருட்டு மலை மேலிருந்து கீழே வருதலும் வழக்கம். நாச்சிமுத்து என்னும் அன்பர்க்கு அங்ஙனம் அவர் வீட்டு முற்றத்துக்கு இறங்கி வந்தார்.

திருக்கழுக்குன்றம் திருக் கயிலையாய்த் திகழ்ந்தது. தக்கோர்க்கு வீடளிக்கும் தலம்.

தேனூர் வரகவி சொக்கலிங்கனார்

அடியார்களை வணங்குவது என் கொள்கை. ஆண்டவன் வழிபாடாகவே இதைக் கொள்கின்றேன்.

'சேய்த்தொண்டர் புராணம்' பாடுதற்கு இது வாய்ப்பாயிற்று. இப் புராணம் பாட முக்கிய காரணமாயிருந்த பெரியார் முருகன் அடியாராகிய வ. சு. செ. அவர்கள். அவரையும் வந்திக்கிறேன்.

இளமையிலேயே அடியார் வழிபாட்டு நினைவு எனக்கு உண்டு. இதற்குக் காரணமாயிருந்தவர் என் ஆசிரியர்.

அடியார் வழிபாடு அனைவர்க்கும் நலம் உண்டாக்கும். இத் திருக்கூட்டத்துக்கு வணக்கம் செலுத்துகின்றேன்.

திருமுருக கிருபானந்த வாரியார்

உலகத்தில் எத்தனையோ மொழிகள் இருந்த போதிலும் தமிழ்தான் சிறந்த முன் மொழி என்கிறார்கள். "முந்து தமிழ் மாலை கோடி கோடி" என்று அருணகிரியாரும் கூறுகின்றார்.

கடவுள், இல்லை என்று சொல்கின்றவர்கட்குப் பாலில் வெண்ணெய் போல் மறைவாகவும், இருக்கிறார் என்று சொல்கின்றவர்களுக்குத் தயிரில் வெண்ணெய் போல விளக்கமாகவும் இருக்கின்றார்.

உடம்பு பருத்தவர் விரைந்து நடக்க முடியாது, மென்மையாயிருப்பவர்க்கு முடியும்; தமிழ் மொழி மெல்லியதாதலின், பிற மொழிகளுக்கு முன் இறைவன் செவியில் விரைந்து வருகின்றது.

நாம் உயிர்க்கும் காற்றைவிட உண்ணும் உணவைவிட, நாம் பேசும் தமிழ், நம் உயிரை இனிது வளர்க்கின்றது. அவ்வளவு இனிமையும் உயிர்த் தன்மையும் வாய்ந்தது தமிழ்!

ஞானசம்பந்தர் தனக்காக அழவில்லை; வேத நெறி தழைத்தோங்க, மிகு சைவத் துறை விளங்க, பூத பரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்தழுதார். பிற குழந்தைகள் வாய் குவித்து அழும்; இக் குழந்தை வாய் மலர்ந்து அழுதது.

காக்கைக்கும் குருவிக்கும் கை கிடையாது; முக்கால் அங்குல அலகினால்தான் உயிர் வாழ்கிறது. ஆனால், மனிதன் எண்சாண் உடலை உழைத்து ஒரு சாண் வயிற்றை வளர்க்கிறான்.

உலகம் ஒரு தூண் அன்று, ஞானம் நிறைந்த பெரிய மாளிகை.

வைரத்தைச் சோதிக்கும் அறிவு வேறு, புத்தகம் படித்துத் தேர்வுக்கு எழுதும் அறிவு வேறு. அதுபோலக் கடவுளைக் காண்பதும் வேறு அறிவாகும்.

பிறந்து வளரும் குழந்தைக்கு முதலில் செய்யும் விழா காதணி விழா! ஏன்? பிறந்ததன் பயன் நல்லதைக் கேட்பது என்பதற்கு! சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் முதல் திருமுறையில் முதல் பாசுரத்தில் முதல் தொடர் "தோடுடைய செவியன்" என்று செவியைப் பற்றியே வருகின்றது. திருமுறைகள், இசைபாடியும் பொருள் விரித்தும் கேட்பதற்குரியன என்பது குறிப்பு.

ஞானசம்பந்தர் உண்ட பால், ஞானம்! அந்தப் பாலில் தமிழ் கலந்து கொடுக்கப்பட்டது. அதனால் அவர் பாடல்கள் தமிழில் வெளிவந்தன. இஞ்சி கலந்த பொருளில் இஞ்சி மணந்தானே வெளிவரும்.

- புதிய தடுத்தாட் - கொண்ட புராணம்

'மதி'

சென்ற மாதத்தில் சிவனடியார் திருக்கூட்டம் திருக்கழுக்குன்றத்தில் கூடியது. அப்போது ஏராளமான அன்பர்கள் வந்திருந்தார்கள். அறிஞர் பலர் சொற்பொழிவு செய்தார்கள். இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயக்கக்கூடிய உண்மையான கருத்துக்களைப் பல உதாரணங்களுடன் எடுத்துக் கூறினார்கள். அன்பர்கள் அமைதியாகவும் ஆர்வமாகவும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.



ஏராளமான அன்பர்கள் வந்திருந்தார்கள்.

விழாவின் மூன்றும் நாள் மாணிக்க வாசகர் திருநாள்! அன்று மாலை ஆசிரியர் இளவழகனார் சொற்பொழிவு இருந்தது. அதனால், அன்பர்கள் எல்லாரும் வெட்ட வெளியாகிய மலைச் சாரலில் கூடினார்கள்.

இயக்கக் கடவுளாகிய அம்பல வாணர் அம்பலந்தனில் (திறந்த வெளியில்) ஆடினர். அ[illegible] போலவே, அவரைப் பற்றிய அருளுரையை அன்பர்களுக்குக் கூறவும் அம்பலந்தனிலே என்ற நோக்கம் ஆசிரியருக்குத் தோன்றியதுபோலிருக்கிறது.

எடுத்த காரியத்தை வீரத்துடன் முடிக்கும் மன்னர்கள் தோன்றிய உலக மாதலாலும், எதிர்ப்பு இன்றி இனிமையாகப் பேசி அடிமை வாழ்வை நீக்கி உரிமை வாங்கிக் கொடுத்த மகான்கள் காலமாதலாலும் நம் ஆசிரியர் நோக்கத்தை ஆண்டவரே முன்வந்து நிறைவேற்றுகின்றார்.

சிலர் கருதலாம், நாம் ஒருவருக்கு உபகாரம் செய்கிறோம்; அவர்களே நமக்கு உபகாரம் செய்ய நினைக்கிறார் [illegible] மனிதருக்கு மனிதரே இப்போது [illegible]புவதில்லை. ஆண்டவர் ஒருவரைத் தடுத்தாட் கொண்டார் என்பது எப்படி பொருந்தும்? என்று; செய் முறையில் ஆண்டவர் இப்போது ஒருவரைத் தடுத்தாட்கொண்டிருக்கிறார். நாம் எல்லோரும் நேரில் கண்டது.

தற்காலத்தில் மழை யில்லாமல் எல்லாரும் வருந்துகின்றனர். திருக்கழுக்குன்றத்திற் கூடியிருந்த அன்பர்களுக்குக் குளிக்கத் தண்ணீர் இல்லாமல் இடராயிருந்தது. தண்ணீர் சிறிதளவு கிடைத்தது. 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பதுபோல அன்பர்கள் அதையே ஆனந்தமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

சிலருக்குப் பெரிய குறை இருந்தது; சங்கு தீர்த்தத்தில் குளிப்பதற்கு நீர் இல்லையே என்று; இதற்கு வருத்தப்படுவது பொருந்தும். எனெனில்,

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

[7-ம் பக்கம் தொடர்ச்சி]

ஓர் இடத்தில் மின்சார விளக்கும் மண்ணெண்ணெய் விளக்கும் இருந்தால் மின்சார விளக்கைத்தான் மக்கள் பயன் துய்ப்பார்கள். மண்ணெண்ணெய் விளக்கை உபயோகிக்க மனம் சம்மதிக்காது. இது பொதுவாக மனிதர்களின் இயல்பு! அதுபோல, வேறு எந்த இடத்தில் தண்ணீர் இருந்த போதிலும் சங்கு தீர்த்தத்தில் குளிக்காமல் இருந்தது வருத்தமானதுதான்.

அன்பர்களுக்கு அருள்புரிய வேண்டும் என்ற எண்ணம் ஆண்டவனுக்கு நிறைய உண்டு. நாம்தான் அதைப் பெற வழி தேடாமல் இருக்கிறோம். தூய்மையும் பக்தியும் ஒரே நிர்ணயமுமுடைய மனதைத் தனக்கு இருப்பிடமாகக் கொள்கின்றார் ஆண்டவர்.

மலைச் சாரலில் அன்பர் கூட்டம் திரளாகக் கூடியிருந்தது. ஆசிரியர் விரிவுரை நிகழவேண்டும். முதலில், மன்னர்கள் வீரம் புரிவதுபோல், அறக் கடவுளே ஆட்சி செலுத்துவது போல், முருகக் கடவுளே அருளுரை கூறுவது போல் திருமுருக கிருபாநந்தவாரியார் தொடக்க வுரை கூறினார்.

ஆசிரியர் விரிவுரை, தடுத்தாட் கொண்ட புராணத்தைப் பற்றியது. என்ன பொருத்தம்! அவர் விரிவுரை ஆரம்பிக்குமுன் நல்ல மழை பொழிய ஆரம்பித்து விட்டது. மழை பொழிந்த பொழுதும் சிறிது நேரம் அன்பர்கள் இருந்தார்கள். தொடர்ந்தாற்போல் அதிக மழை பொழியவே கூட்டம் கலைந்து நிகழ்ச்சி மாற வேண்டியதாயிற்று.

புராணம், தடுத்தாட்கொண்ட புராணம்! அதைப்பற்றிக் கூறும்போது ஆண்டவர் மழை பொழிந்து ஆசிரியரையும் தடுத்தாட்கொண்டார்.

மற்ற நேரங்களில் கூட்டம் அம்பலத்தில் நடக்க வில்லை; மண்டபங்களில் நடந்தது. தடுத்தாட்கொண்ட புராணத்தைப் பற்றிய அறிவுரை கூறும் ஆசிரியரைத்தான் இப்படி தடுத்து ஆட்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இறைவனுக்கு இருந்தது போலும்!

இந்த மெய்ந் நிகழ்ச்சியைக் கண்டதிலிருந்து ஆசிரியர்க்கு இதுவரையில் உள்ளத்தளவில் இருந்த அடிமைத் திறம் புறத்திலும் தெரிய ஆரம்பித்துவிட்டது.

ஆம்! முன்னோர் வரலாறுகள் நிறைய இருக்கின்றன! அக்காலத்திலும் அடியார்கள் பலர் தோன்றியிருக்கிறார்கள். அவர்களில் ஓர் அடியாரை மட்டும் தனக்கு ஆள் என்று ஆண்டவர் தடுத்து ஆட்கொண்டார்.

உண்மைகளில் தெளிவு இல்லாதவர்களுக்கு அறிவு எவ்வளவு கூறிய போதிலும் உணர்ச்சி சிறக்க வில்லையே, ஆதலால் அறிவுரை கூறுபவரேயே தடுத்து ஆட்கொண்டால் அதற்கு நல்லது; நிகழ்ச்சியால் உணர்ச்சி சிறக்கும் என்ற நோக்கத்தை இது புலப்படுத்துகின்றது. என்ன ஆச்சரியம்! அன்பர்களுக்காக ஆண்டவர் தக்கது செய்ய நேரம் பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார் போலும்!

பேச்சைத் தடுத்து, செயலை முன் நிகழச் செய்தார் ஆண்டவர். இதிலிருந்து, செயல் முன்னும் பேச்சு பின்னுமாக நடப்பது நல்லது என்று அன்பர்கள் தெளிந்து ஒழுக வேண்டியிருக்கிறது.

ஆனால், ஆண்டவன் செயலுக்கும் அவரால் படைக்கப்பட்ட மனிதர்களுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது! இனிமேலாவது ஆண்டவன் நடத்திக் காட்டிய கழுக்குன்றச் செய்கையைப் பின்பற்றிச், செய்கை முன்னும் பேச்சு பின்னுமாக நடக்க முயல்வோமாக! ஆசிரியர் அந்நேரத்திலேயே தம் வாழ்க்கைப் போக்கை இங்ஙனம் மாற்றிக்கொண்டிருப்பார் என்று எனக்குத் தோன்றுகிறது.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பது முதுமொழி. கழுக் குன்றம் வழிபாட்டுக்கு வந்திருந்த எத்தனையோ நல்லார் பொருட்டு நடந்த இச் செயல், நிரம்பப் பலர்க்கும் பயன் செய்யலாம். சங்கு தீர்த்தத்தில் குளிக்கவில்லை என்ற கவலை எல்லார்க்கும் நீங்கியது

மழை வந்து கெடுத்ததே என்ற எண்ணம் யாருக்கும் தோன்றினதாகத் தெரியவில்லை. அன்பர்கள் கவலை தீர, ஆண்டவரே வானிலிருந்து மழையாக இறங்கினார் என்று எல்லாரும் பரமானந்தம் அடைந்தார்கள்.

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)